தமிழ்ச் சிட்டு

தனித்தமிழ்ச் சிறுவர் கலை இதழ்



குரல்: 5

இசை: 12

விலை: 25 காசு.

யாருக்காக, நீ?

ஊருக்காகவோ,
உலகுக் காகவோ,
உலகில் வாழ்வதாய்
எண்ணாதே!—பெருமை
பண்ணாதே!—அட,
யாருக்காகவும்
வாழ்ந்திட வில்லை! - உன்
சீருக்காகவே பிறந்தாய்!—உயிர்ச்
சிறப்புக்காகவே வாழ்ந்தாய்!

நீருக்காகவோ,
நிலத்துக் காகவோ
நெடுமரம் தோன்றிதென்
றெண்ணாதே!—பிழை
பண்ணாதே!—அட,
வேருக்குமில்லை;
வித்துக்கு மில்லை; –தன்
விளைவு சிறக்கவே தோன்றும் –பல
வித்துகளை மண்ணில் ஊன்றும்!

உனக்காகத்தான்
நீவந்து பிறந்தாய்!
உயிரொளி பெறுவதே
அதன் நோக்கம்!—உள
உயர் வாக்கம்!—அட,
மனக்கோட்டை யெல்லாம்
மண்ணோடு சிதறும்! –உயிர்
மாயாக் கோட்டைநல் எண்ணம்!
–அதில்
மாசிலா திருப்பது திண்ணம்!

தனக்கென நினைப்பதில்
பிறர்நலன் கெடாமல்
தவறின்றி வாழ்வதே
உயர்வாழ்க்கை—பிறி(து)
உயிர்வீழ்க்கை—அட,
மனக்கசண் டெல்லாம்
பொதுமையால் போகும் - உடல்
மாயினும் உயிர்நலம் பெருகும்!
—உனை
மதித்து, நினைந்துநிலம் உருகும்!

குழந்தை... !

கன்னங் கரிய முடி!
பசும்பொன் நெற்றி!
கருக்கொள் இளம் புருவம்!
கிளிஞ்சிற் காது!
சின்னஞ் சிறிய விழி!
சிமிழின் மூக்கு!
சிரிப்பைக் கிழிக்கும் இதழ்!
சிறு பொக்கை வாய்!

பொன்னின் பொலிந்த முகம்!
பளிங்குக் கன்னம்!
புருவின் மணிக்கழுத்து!
குருத்துத் தோள்கள்!
மின்னல் தெறித்த ஒளி!
கரைத்த சாந்தில்
வெண்ணெய் பிசைந்தவுடல்!
குளிர்ந்த மேனி!

செக்கச் சிவந்த நிறம்!
செம்பொன் கைகள்!
செவ்வரளி மொக்குவிரல்!
உமி உகிர்கள்!
தக்குத்தை தாளக்கால்!
தளிர்செம் பாதம்!
தாமரைப்பூங் குளிர்மை மணம்
உடலம் எங்கும்!

பொக்கைவாய்ப் பூமணத்தை
மோந்து மோந்து,
பூச்செண்டு மேனியின்மேல்
முகத்தால் நீந்திச்
சொக்கும் உளம்! சொக்கும் உயிர்!
சுழலும் எண்ணம்!
சொல்லழியும்; நினைவழியும்!
சொந்தம் மாயும்!

தமிழ்ச்சிட்டு

தனித்தமிழ்
சிறுவர் கலைஇதழ்

இன்றைய பயனே நேற்றைய உழைப்பு!
இன்றைய சிறுவர் நாளைய உலகம் !
நன்று செய்வதே நமக்குநல் வாழ்க்கை!
என்றும் அழியாது இருப்பது புகழே!

குரல்–5. | தி. பி. | உ௰௰உ | சுறவம்—சன-பிப்-72 | இசை–12

பண்பாடும் நாகரிகமும்:-!

பண்பாடு என்பது அகச்சீர்மை. நாகரிகம் என்பது புறச்சீர்மை. சீர்மை, செப்பம், ஒழுங்கு என்னும் சொற்கள், சிறப்பு மிகுந்த உயர்வான நடைமுறைகளைக் குறிக்கும். உயிர்கள் பல பாகுபாடுகளைக் கொண்டன. புழுவும் எறும்பும் ஈயும் உயிர்கள்தாம். எலியும், நாயும், புலியும் உயிர்களே! குருவியும், புறாவும், பருந்துங்கூட உயிர் இனங்கள் தாம்! உடையணியாமல், மொழியில்லாமல், நல்ல வாழ்க்கையில்லாமல் வாழ்கின்ற காட்டு மாந்தனும், உடையணிந்து நல்ல மொழி பேசி, சிறப்பாகவாழ்கின்ற நாட்டு மாந்தனும் உயிர்கள்-தாம்! மாந்தனைத் தவிர மற்றைய உயிர்கள் என்றென்றும் ஒரே படியாய் வாழ்ந்து கொண்டிருக்கும். உண்ணுவதிலோ உறைவதிலோ வாழ்வதிலோ அவற்றிற்கு மாற்றமில்லை. அவற்றிற்கு அகவுயர்வும் இல்லை; புறவுயர்வும் இல்லை. மாந்தனுக்கோ அகவுயர்வும் உண்டு, புறவுயர்வும் உண்டு. அவன் எண்ணங்களும் கருத்துகளும் உயர்ந்து சிறப்பது தான். அகவுயர்வு. அவனுடைய உணர்விலும், உடையி

வெளியீட்டாளர், பொறுப்பாசிரியர்: பெருஞ்சித்திரன்
தென்மொழி மின் அச்சகம், கடலூர்–1. தமிழகம்.

லும், உறையுளிலும் உயர்ந்து சிறப்பதுதான் புறவுயர்வு. இவ்விரண்டு நிலைகளிலும் மாந்தனுக்கு வளர்ச்சிதான் இருக்கவேண்டும்; தாழ்ச்சி இருக்கக் கூடாது. விலங்குகளுக்கோ தாழ்ச்சியுமில்லை; உயர்ச்சியுமில்லை. மாந்தர்களுடன் ஒட்டி உறைவதால் அவற்றின் பழக்க வழக்கங்கள் மாறுபட்டாலும் அந்நிலையை அவற்றின் அடுத்த தலைமுறைக்கு அவை கற்பித்துக் கொடுப்பதில்லை. எனவே மாந்தன் விலங்கு; பறவை போலும் சிற்றுயிர்களை விடப் பலமடங்கு உயர்ந்தவன்; சிறந்தவன்; மேலும் மேலும் உயரக்கூடியவன்; சிறக்கக் கூடியவன்.

மாந்தனுக்கு உள்ள அகக்கருவிகளுள் மனம் என்பதும் அறிவு என்பதும் அவனின் உயிரமைப்பிலேயே மிகச் சிறந்த கருவிகள். அறிவற்றவனுக்கும் மனம் இருக்கலாம். மனம் உள்ளவனுக்கெல்லாம் அறிவு இருக்கும் என்று சொல்ல முடியாது. குழந்தை அழுதவுடன் அதைப் பார்த்து இரங்குவதும், அதற்குப் பாலூட்டுவதும் மனம். ஆனால் அக்குழந்தை, மேலும் பசியாலோ நோயாலோ அழாமற் காப்பது அறிவு. அஃதாவது உயிர்கள் தம்முள் கொண்டிருக்கும் பிணைப்பை—ஓர் ஒன்றிப்பை உருவாக்குவது மனம். அன்பு, அருள், இரக்கம், ஈவு, பெண்மை, தாய்மை—ஆகிய இவையெல்லாம் மனத்தின் செயற்பாடுகள். அறிவோ இவற்றைக் கொண்டுசெலுத்தும் தன்மைகளையும் அவற்றின் நன்மை தீமைகளையும் உணர்த்துகின்ற ஓர் இயல்பூக்கம் ஆகும்! மனத்தின் இயல்புநிலைகள் ஏற்கனவே உயிரொடு பிறந்தன. ஆனால் அறிவின் ஊக்க நிலைகள் உயிர் பிறந்தபின் வளர்ந்து வருவன. மாந்தனைத் தவிர பிற உயிர்களுக்கு அவ்வவற்றின் தன்மைகளுக்கேற்ப மனமும் உண்டு; அறிவும் உண்டு. ஆனால் அவை என்றும் ஒரே நிலையில் நிற்பன. மாந்தனுக்கோ மனமும் அறிவும் நாளுக்கு நாள் – நொடிக்கு நொடி வளர்வன. ஒரு நாயோ, புலியோ தனக்கு இயல்பாக உள்ள மன, அறிவு நிலைகளைத் தவிர, புதிதாக மாந்தனால் கற்பிக்கப்பெற்ற மன, அறிவுப் பயிற்சிகளைத் தொடர்ந்து காத்துக் கொள்ள முடியாது; தன் பிறங்கடைகளுக்கும் அப்பயிற்சிகளை கற்பிக்கவும் முடியாது. ஆனால் மாந்தன் தானாகவும் தன் மனத்தையும், அறிவையும் வளர்த்துக்கொள்ள முடியும்; தன் பிறங்கடைகளுக்கு அவன் அவற்றைப் பயிற்றுவிக்கவும், விட்டுச் செல்லவும் கூட முடியும். பறவை, விலங்கு இனத்துள் ஒன்றன் பயிற்சி அல்லது வளர்ச்சி தானே ஏற்படுவது இல்லை. அவ்வாறு ஏற்படினும் சூழ்நிலைகளால் ஒரு சிறு அளவே

ஏற்படும். அவையும் அவ்வுயிர்களுடனே மாய்ந்துபோகும். மாந்தனுக்கும் பிற உயிர்களுக்கும் உள்ள மிகப் பெரிய வேறுபாடு—சிறந்த உயிர்வேற்றுமை இது தான். அதனால்தான் மக்களுக்குப் பண்பாட்டு வளர்ச்சியோ நாகரீக வளர்ச்சியோ உண்டு. பறவைகளுக்கோ விலங்குகளுக்கோ அவை இல்லை. மக்களுக்குள்ளும் அவை வளர்ந்து போகல் வேண்டும். இல்லையெனில் அவர்களும் பறவைகள் போலவும் விலங்குகள் போலவும் மதிக்கப் பெறுவர். இனி, அவை வளர்வதற்கு மாறாய்த் தாழ்ந்துபோனாலோ அவற்றினும் கீழாகவே மதிக்கப் பெறுவர். உடல் உருவத்தால் மட்டும் மாந்தன் உயர்வாக மதிக்கப்பெற்று விடமாட்டான். உருவத்தில் நம் போலவும் பண்பிலும் அறிவிலும் விலங்குகள் போலவும் உள்ள மக்களை நாம் காட்டுவிலங்காண்டிகள்[காட்டு மிராண்டிகள்] என்றுகூறவில்லையா? அது போல்தான்!

[தொடரும்]

—பெருஞ்சித்திரன்

இசைத் துறைத் தமிழ்ச் சொற்கள்

வடசொல்	தமிழ்ச்சொல்	வடசொல்	தமிழ்ச்சொல்
சங்கீதம்	—இன்னிசை	பஞ்சமம்	–துத்தம்
இராகம்	—பண்	தைவதம்	–கைக்கிளை
பல்லவி	—முதனிலை	நிஷாதம்	–உழை
அநுபல்லவி	—இடைநிலை	அரிகாம்போதி	–செம்பாலை
சரணம்	—நிறைநிலை	கல்யாணி	–மேற்செம்பாலை
ஆரோகணம்	—எடுப்பிசை	சங்கராபரணம்	–அரும்பாலை
அவரோகணம்	—படுப்பிசை	தோடு	–விளரிப்பாலை
ஜதி	—சொற்கட்டு	சுத்ததோடி	–செவ்வழிப்பாலை
ஜண்டை	—அடுக்கு	நடபைரவி	–படுமலைப்பாலை
ஸ்வரம்	—இசை	கரஹரப்பிரியா	–கொடிப்பாலை
சப்தஸ்வரம்	—ஏழிசை	இந்தோளம்	–இந்தளம்
ஷட்ஜம்	—இளி	கமகம்	–அசைவு
ருஷபம்	—விளரி	சுத்தசாவேரி	–சாதாளி
காந்தாரம்	—தாரம்	சுத்ததன்யாசி	–தனுசி
மத்யமம்	—குரல்	மத்திமாவதி	–செந்துருத்தி

[தொகுப்பு:— கதிர்-சுப்பையன், குடந்தை]



முட்கள் செறிந்தபுதர்,
    மொய்த்த செடிகொடிகள்,
புட்கள் நுழையாப்
    பொதிந்த தழையிலைகள்,
ஊடே கழுதை
    உடம்பை நெளித்தபடி
காடே வியப்படையக்
    காட்டரசன் தன்னைச்
சுமந்துசெலும் போதே, தன்
    நெஞ்சம் சுமந்த
சுமையை—பழங்கதையை-
    சொந்த வரலாற்றை-
வல்லரிமா நெஞ்சை
    வருத்திப் பிழிந்தெடுக்கும்
சொல்லுருவாய்க் காட்டிச்
    சுமைமறக்கச் சென்றதுவே!

பெண்கழுதை சொன்ன
    பெருங்கதையைக் கேட்டபடி
எண்ணிரண்டு கற்கள்
    இரண்டும் கடந்தபின்னே
காட்டுச் செறிவிலொரு
    கற்பாறை தென்படவும்
நீட்டுங் கதைநிறுத்தி
    'நில்'லென்ற(து) ஆணரிமா.

‘‘வெள்ளம்போல் நெஞ்சழுத்தி
வெற்பாய் உயிர்கனத்த
உள்ளச் சுமையை
உங்கள்பால் மாற்றியதால்
என்முதுகின் வன்சுமையை
இம்மி உணரவில்லை’’—

என்று கழுதை
இனிதுரைக்க, வல்லரிமா,

‘‘நன்று பெண்ணே! நீ வாழ்க!
நான்உன்போல் கண்டதில்லை!
குன்றுபோல் அன்பு
குவித்தநெஞ்சம் உன்நெஞ்சம்!
நல்லறிவு நற்கடமை
வாய்த்திருக்கும் நல்லவள்நீ!
சொல்லரிய துன்பச்
சுமையோடு என்னையும்நீ
தூக்கிச் சுமந்து
துயர்போக்கி வந்தாய்காண்!
காக்கின்ற மாவரசன்
தன்னைநீ காத்துவிட்டாய்!
காட்டு விலங்கரசன்
கட்டளைகேள்! இன்றுமுதல்
நாட்டுவிலங் கானஉன்னை
நல்லமைச்சர் ஆக்குகின்றேன்!

ஈங்கிதுகாண், பெண்ணே!
இருப்பைக்கா(டு) இக்காடு
பாங்காய் இதன்பரப்பைப்
பார்த்திருக்க மாட்டாய்,நீ!
சொல்லுகின்றேன் கேள்;அதன்முன்
என்னைச் சுமையிறக்காய்;
எல்லா விலங்கனைத்தும்
மாலைக்குள் இங்குவரும்
உன்னை அறிவிப்பேன்;
உன்பெருமை கூறிடுவேன்;
என்னமைச்சாய்த் தேர்ந்த
தெடுத்துரைப்பேன்’’—என்றதுவே!

—தொடரும்

முத்துமொழிகள்

தொகுப்பு: அவிநாசி இளந்தமிழன்

* காலத்தின் நிலையை அறிந்து கொள். காலமே உன் உயிர். அதை வீணாக்குவது உன்னையே நீ கொலை செய்வது போல் ஆகும். —நசம்சு இலேன்

* கொள்கைகள் விண்மீன்கள் போன்றவை. அவற்றைக் கைக்குள் அடக்கி விட முயன்றால் தோல்வி உறுதி. ஆனால் அவற்றை வழிகாட்டிகளாகக் கொண்டு பின் தொடர்ந்து சென்றால் போக வேண்டிய இடத்தை அடைவது உறுதி.

—கார்ல் உருசு

* குமுகாயத்தில் புரட்சி தோன்றும் முன்பு உள்ளத்தில் புரட்சி உருவாக வேண்டும். —ஓர் அறிஞன்

* சிறந்த சொல் வன்மையால் திருடன் உள்ளத்தையும் திருப்பி விடலாம். மன நோயையும் உடல் நோயையும் கூட மாற்றி விடலாம். -எமர்சன்

* தாய் மொழியைத் திறமையாகப் பயன்படுத்த அறியாத எவனும் பிறமொழியைத் திறமையாகப் பயன் படுத்தக்கற்றுக் கொள்ளுதல் கடினம். -பெர்னாட்சா

* காலம் என்னும் மாபெரும் ஆழியின் நடுவே அமைக்கப்பெற்ற கலங்கரை விளக்குகளே புத்தகங்கள். —விப்பிள்

* எத்தனை முறை துலக்கினாலும் பித்தளையின் குணம் மாறாது. அதுபோல் வாழ்க்கையில் சிலர்க்கு எத்தனை முறை நல்லறிவு புகட்டினாலும் அவர்களின் தீக்குணம் மாறுவதில்லை. —பங்

* இறந்தபின் வரப்போகும் புகழுக்கு ஆசைப்பட்டு அலையாதே. நீ இறந்தபின் உன்னைப் பற்றி யார் என்ன சொன்னாலும் உனக்கு என்ன? உன் காதுக்கு அஃது எட்டாது.

-மார்க்க அரேலியர்

* மாந்தனே! உன் மனத்தில் பட்டவற்றை உடனே சொல்லிவிடு: இல்லையென்றால், சில நாட்கள் கழித்து உன் கருத்தை வேறு ஒருவன் வாயிலாகக் கைகட்டி நின்று அறவுறையாக நீயே கேட்க வேண்டி வரும். —எமர்சன்

சில காட்டு விலங்குகள்...!

தொகுப்பு:- மா. தாமரை(நிரசா) பல்லடம்.

யானை:— யானைகள் ஆப்பிரிக்காவிலும், இந்தியாவிலும், பர்மாவிலும், இலங்கையிலும், வேறு சில கிழக்கு நாடுகளிலும் காணப்படுகின்றன. ஆப்பிரிக்க யானைகள் இந்தியாவிலுள்ள யானைகளைக் காட்டிலும் பெரியவை. ஆப்பிரிக்க யானைகளில் இருபாலினங்களுக்கும் மருப்புகள் (தந்தங்கள்) உள்ளன. இந்திய யானைகளில் களிறுகளுக்கு மட்டும் மருப்புகள் இருக்கின்றன. யானைகள் மணத்தினை (Smell) அறிவதில் நுண்ணிய ஆற்றல் வாய்ந்தவை. இவற்றின் கண்பார்வை சற்று மந்தமானவை. யானை ஒரு நாளுக்கு 1000 கையெடை (பவுண்டு) நிறையுள்ள இலைகளையும் தளிர்களையும், புற்களையும் உட்கொள்ளும். 30 முதல் 50 குடுவை வரை தண்ணீரையும் உட்கொள்ளும். யானைகளுக்கு நினைவாற்றல் மிகுதி. யானைகள், செய்யுந் தீங்கை மறக்காது பழி வாங்கிவிடும் என்பது ஓரளவுக்கு உண்மையே. யானைகள் எப்போதும் மந்தைகளாகவே காணப்படுகினறன. அம்மந்தைகள் களிறு ஒன்றினால் ஆளப்படுகின்றது. சில வேளைகளில் தலைமைப்பதவிக்காக யானைகளிடையே சண்டைகள் நிகழ்வதுண்டு. தோவியுற்ற யானை மந்தையிலிருந்து விலகி முரட்டுத் தனமான (Rogue) யானையாக வாழும். யானைகளை அவற்றின் விலையுயர்ந்த மருப்புக்களுக்காகவே, வேட்டையாடுகின்றனர்.

காட்டெருமை:- இவை பொதுவாக இந்தியக் காடுகளிலும் ஆப்பிரிக்காவிலும் காணப்படுகின்றன. காட்டெருமைகள் பொதுவாக 'Cape Buffelo' என்று அழைக்கப்படுகின்றன. காட்டெருமைகள் எப்போதுமமந்தைகளாக வாழ்கின்றன. நன்ருக வளர்ந்த ஓர் ஆண் காட்டெருமை 6அடி உயரமும், 2000 முதல் 3000 கையெடை(பவுண்டு) எடையும் இருக்கும். இவை நம்பிக்கை வைக்கத் தகுதியில்லாத உயிரினங்களாகும். பழக்குதற்கு அரியன. அரிமாவும், புலியும் கூட இவற்றைத் தாக்க அஞ்சும்

சிறுத்தை [வேங்கை]:- இவை ஆப்பிரிக்காவிலும், இலங்கையிலும், இந்தியாவிலும், சீனுவிலும், பர்மாவிலும் காணப்படுகின்றன. இவை 7 அடி நீளம் வளர்கின்றன. இவற்றின் நிறம் பழுப்பு; காட்டு மல்லிகை போன்ற உருவத்தைக் கொண்ட புள்ளிகள் காணப்படும். இவை புலியைவிட அறிவுக்கூர்மையுடையன; காட்டு விலங்குகளிலே இவைதாம் மிக அழகும், அருளும் [graceful] உடையன.

-தொடரும்

தொடர்: 4

பிழையில்லாமல் எழுதப் பழகுங்கள்!

பேரா. மு. வை. அரவிந்தன், கீ. க. மு.

6. எப்படியும் எழுதலாம்.

சில சொற்கள் இரு வகையாக வழங்குகின்றன. இரு வகை வழக்கும் நூல்களில் இடம்பெற்றுள்ளன. அச்சொற்களை எப்படி வேண்டுமானாலும் எழுதலாம். ஊசல்-ஊஞ்சல்; கூடு-கூண்டு; பூடு-பூண்டு; திருடு-திருட்டு; முடை-முட்டை என்று இரு வகை வழக்கும் உள்ளன. இவ்வாறே உலவு-உலாவு; துழவு-துழாவு; நடத்து-நடாத்து; குலவு-குலாவு; வினவு - வினாவு என்றும் வழங்குகின்றன. கள்வன் - கள்ளன், கனா - கனவு; காக்கை-காகம்; சலங்கை-சதங்கை; சூடாமணி - சூளாமணி; பண்டசாலை-பண்டகசாலை; நுனி-நுனை; எல்லாரும்-எல்லோரும்; பஞ்சு-பஞ்சி என்ற இருவகை வழக்கும் சரியானவை. கட்டிடம், பட்டினம் என்பவை கட்டடம், பட்டணம் என்றும் வழங்குகின்றன.

வாணிகம் என்ற சொல் வாணிபம் என்றும் வணிகம் என்றும் வழங்குகின்றது.

வையை காவிரி, என்னும் ஆற்றின் பெயர்கள் வைகை காவேரி என்று மாறி வழங்குகின்றன. கோயில் வாயில் என்பவை கோவில் வாசல் என்று வருகின்றன. யானை - ஆனை என்ற இரு வகை வழக்கும் உள்ளன. சேலை-சீலை என்றும் வழங்கப்படுகின்றது.

சில சொற்கள் குறுகியும் வழங்குகின்றன. உருண்டை, -உண்டை; பெயர்-பேர்; வியர்வை-வேர்வை; இயந்திரம்-எந்திரம்; இயேசு-ஏசு என்பவை குறிப்பிடத்தக்கவை.

ழ-ள-ல ஆகிய மூன்று எழுத்துகளும் மாறிச் சொற்களில் இடம் பெறுகின்றன. உழுந்து-உளுந்து; பவழம் - பவளம்; இழிவு-இளிவு; மெல்ல-மெள்ள ; மங்கலம்-மங்களம்; செதில்-செதிள்; மதில்-மதிள்—என்று இருவகையாகவும் எழுதப்படுகின்றன.

7. ஏற்றுக்கொண்ட பிழைகள்

சில சொற்களின் பிழையான வடிவங்கள் எல்லோராலும் ஏற்றுக் கொள்ளப்பெற்றுவிட்டன. அவற்றின் திருந்திய வடிவங்கள் மறைந்துவிட்டன. பூச்சுணை(க்காய்) என்பது பூசுணை, பூசணி பூசனி பூசினி என்று பலவாறு வழங்குகின்றது. கடா என்னும் சொல் கிடா என்றும் கிடாய் என்றும் மாறியுள்ளது சிகைக் காய், சீயக்காய் என்றும் சீய்க்காய் என்றும் மாறிவிட்டது. கொதுகு என்ற சொல் கொசு என்று சுருங்கியுள்ளது.

திருக் கழுகுக் குன்றம் என்னும் ஊர்ப்பெயர் திருக்கழுக் குன்றமாகிவிட்டது. திருத்தணிகைமலை திருத்தணியாகியுளது. திருச்சிராப்பள்ளி திருச்சியாக மாறிவிட்டது. சிற்றூர் ஆற்றூர் என்பவை சித்தூர் ஆத்தூர் என்று திரிந்து வழங்குகின்றன. ஆவிநன்குடி ஆவினன்குடி என்றாகிவிட்டது.

பனிநீர், பன்னீராகவும், நாநயம் நாணயமாகவும், குன்றி மணி குண்டுமணியாகவும் மாறியுள்ளன. மாணுக்கன் என்னும் சொல் மாணவன் என்று திரிந்து. அதிலிருந்து மாணவி என்ற பெண்பாற் சொல்லும் பிறந்துள்ளது. பற்றுவரவு, எத்துணை, வேண்டா ஆகிய சொற்கள் முறையே பைத்துவரவு எத்தனை வேண்டாம் என்று மாறியுள்ளன. மார்பு என்னும் சொல் மார் என்று குறுகி, மார்தட்டுதல் மார்வலி மார்மேல் என்று வழங்கு கின்றன.

அம்மை, அப்பன், மாமன், அண்ணன் என்பவை முறையே அம்மா, அப்பா, மாமா, அண்ணு என்று வழங்கி வருகின்றன. மைத் துனன் என்னும் வடசொல் மச்சினன் என்று மாறி மச்சான் என்று திரிந்துள்ளது.(மைத்துனன் என்பதற்கு நேர்தமிழ்ச்சொல் அளியன் என்பது) நாயகன் என்பது நாய்கன் என்றும் நாயக்கன் என்றும் நாய்க்கன் என்றும் வழங்குகின்றது.

8. தொடர்மொழியில் தோன்றும் பிழைகள்

சொற்களில் தோன்றும் பிழைகளைப்போலவே சொற்றொடர் களில் பிழை தோன்றுவதுண்டு. எத்தனையோ பல தலைவர்கள், அளவற்ற பல வேலைகள், மற்ற இதர வேலைகள், போர் ஆயுதக்

கருவி, வாழ்த்துப்பா பாடினர் நூற்றுக்கு ஐம்பது சதவீதம், நெல்விதை விதைத்தான், நூலக நிலையம் – ஆகிய தொடர்களில் பிழைகள் உள்ளன. இவற்றை முறையே எத்தனையோ தலைவர்கள் (அல்லது பல தலைவர்கள்), அளவற்ற வேலைகள் அல்லது பல வேலைகள்) மற்ற வேலைகள், போர்க் கருவி, வாழ்த்துப்பாடினர், நூற்றுக்கு ஐம்பது, நெல்விதைத்தான், நூலகம் (அல்லது நூல் நிலையம்) என்று திருத்தமாய் எழுதவேண்டும்.

இருக்காவிட்டால் என்பதை இல்லாவிட்டால் என்றும், சிறிது நாள் என்பதைச் சிலநாள் என்றும் எழுத வேண்டும். ஒவ்வொரு, தோறும் ஆகிய சொற்களைத் தொடர்களில் அமைக்கும் போது, அவற்றை ஒருமைப் பெயரோடு மட்டுமே சேர்க்கவேண்டும்.

மாலையில் ஒவ்வொருமனையிலும் விளக்கு எரிந்தது.
மாலையில் மனைதோறும் விளக்கு எரிந்தது.

என்று எழுதவேண்டும். ஒவ்வோரு மனைதோறும் என்றோ மனைகள் தோறும் என்றோ எழுதுவது பிழையாகும். பிரதி ஞாயிறு தோறும் விடுமுறை என்பது பிழை. இதனைப் பிரதிஞாயிறு என்றோ, ஞாயிறுதோறும் என்றோ எழுதவேண்டும். வெந்நீராவது அல்லது தண்ணீராவது கொடு, என்பது பிழை. இதனை வெந்நீராவது தண்ணீராவது கொடு, வெந்நீர் அல்லது தண்ணீர் கொடு என்று ஏதேனும் ஒருவகையால் எழுதவேண்டும். வரலாற்றிலோ அல்லது இலக்கியத்திலோ சான்று தருக –என்பதில் உள்ள 'அல்லது' என்னும் சொல் தேவையற்றதாகும்.

–தொடரும்.

தென்மொழி கடலூர்-I.

தனித்தமிழில் வெளிவரும் உயர்ந்த இலக்கிய இதழ்.

ஒவ்வொரு தமிழ்த்திங்களும் முதல் நாளன்று வெளிவரும்.

	உள்நாடு	கொழும்பு	வெளிநாடு
ஆண்டுக்கட்டணம்:	9 உருபா.	10-50உருபா	14உருபா
அரையாண்டுக் கட்டணம்:	5உருபா	6 உருபா.	7-50
தனியிதழ்:	75 காசு	90 காசு	1-10

உலக மொழிகளைத் தெரிந்து கொள்ளுங்கள்!

ஆசியா

இந்தியா:— இந்தி, உருது, வங்காளி, ஒரியா, அசாமி, மராத்தி குசராத்தி, தெலுங்கு, தமிழ், கன்னடம், மலையாளம், பஞ்சாபி, காமிதி, சமற்கிருதம், பெர்சியன், ஆங்கிலம்.

சீனு:— சீனம், சுவாங், ஆனி, துன், புய், உய்குர், ஒய், திபேத்தியன், மியாவோ, மஞ்சு, மங்கோலியன், கொரியன், சிபோ, நாசி, தின்போ, திசைவா, காவா, இலாகு, இலிசு, இலாட்டியன், தாய், கசாக்கு, கிர்கிசு, உசுபெக், தாத்தார், தாசிக்.

பர்மா:—பர்மியம், கரென், சன், காச்சின், ஆசி, சீனம், காமிதி, தாய் (சயாமி), மான்.

ஆப்கானிசுதான்:— ஆப்கான், பெர்சியன், குர்திசு, தாசிக், உசுபெக் துருக்குமன்.

வியத்நாம்:— வியத்நாமி, தாய் (சயாமி), இலாட்டியன், கமெர், சீனம்.

ஆன் காங்கு:—சீனம், ஆங்கிலம்.

இசுரேல்:— ஈப்ரு, அராபி.

ஈரான்:—பெர்சியன், அசெர்பாய்சானி, குர்திசு, அராபி, துருக்குமன்

ஈராக்கு:—அராபி, குர்திசு, பெர்சியன், துருக்கி.

ஏமன்:—அராபி, பெர்சியன்

கம்போடியா:—கமெர், வியத்நாமி, சீனம்.

சயிப்ரசு:- (புதிய) கிரேக்கம், துருக்கி, ஆங்கிலம்.

ஏடன்:—அராபி, ஆங்கிலம்,

பக்ரியன்:—அராபி, பெர்சியன்

வடபோர்னியோ:—மலேயி, ஆங்கிலம்.

புருனி:- மலேயி, ஆங்கிலம்.

இந்தோனேசியா:- இந்தோனேசியன், சாவகம், சுந்தனிசு, மதுரா, மாகசார், புய், மினுன்கபா, பதக், சீனம்.

சோர்டான்:— அராபி

காடார்:- அராபி, ஆங்கிலம்.

கொரியா:- கொரிய மொழி

குவெய்த்து:- அராபி. ஆங்கிலம்.

இலாவோசு:—இலாட்டியன், தாய் (சயாமி), காமிதி, மியாவோ, வியத்நாமி, சீனம்.

மலேயா:—மலேயி, சீனம், தமிழ், தாய் (சயாமி).
இலெபனுன்:- அராபி, அர்மீனியன், குர்திசு.
மாலத்தீவுகள்;- சிங்களம், அராபி.
மங்கோலியா:- மங்கோலியன், தவினியன்.
நேபாளம்:- நேபாளி, நேவார், திபேத்தி.
அரபு ஒன்றியக் குடியரசு: அராபி, துருக்கி, குர்திசு, அர்மீலியன், ஆங்கிலம், பிரெஞ்சு.
ஓமான்:- அராபி, ஆங்கிலம், பெர்சியன்.
பாக்கிசுதான்:-உருது, இந்தி, வங்காளி, பஞ்சாபி, சிந்தி.
சரவாக்கு:-மலேயி, சீனம்.
சவூதி அராபியா:- அராபி, துருக்கி, பெர்சியன். ஆமாரிக்கு.
சிரியா:-அராபி, துருக்கி, குர்திசு, அர்மீனியன், ஆங்கிலம், பிரெஞ்சு.
தாய்லாந்து:- தாய் [சயாமி], சீனம், மலேயி, வியத்நாமி, பர்மியம், இலாட்டியன், கமெர், சான், மியாவோ, காரென்.
துருக்கி:- துருக்கி, குர்திசு, அராபி, சியார்சியன், அர்மீனியன், கிரேக்கம்.
இலங்கை:- சிங்களம், தமிழ், மலேயி, அராபி.
சப்பான்.- சப்பானி, கொரியா.
பிலிப்பைன்சு:- தாகலாக்கு, இசுப்பானிசு, ஆங்கிலம்.

சோவியத் ஒன்றியம்:- (உருசியா) உருசியன், பசுகிர், தாத்தார், பரியாத்து, நானை, ஆவார், தார்குவா, குமிக்கு, இலாக்கு, இலெசுகின், தாபாசரன், பல்காரு. காபார்தியன் (சர்காகியன்) கோமி [சைரியன்], மாரி, மோர்துவின்-மோட்சா, மோர்துவின்-எர்சியா, அசெட்டிக்கு, உத்துமர்த்து, இன்குசு, நோகாய், செச்சன், சுவாசு, யாகுத்து, ஈவெங்கி, ஈவென், நிவிக்கு, அடிகி, ஆல்டாயிக்கு, இட்டிசு, அபாசின், கராச்சை, தவினியன், காகசு, கோமி-பெரியன், கொரியாக்கு, நெனட்சு, செல்குப்பு, சக்சா, எசுக்கிமோ, மான்சி, உக்ரேனியன், காகாசி, பைலோருசியன், உசுபெக், துங்கன், உய்குர், காரா-கல்பாக்கு, கசாக்கு, சியார்சியன், ஆப்காசியன், இலிதுனியன், மால்தாவியன், இலெத்திசு, கிர்கிசு, தாசிக், துருக்குமன், எசுத்தோனியன், கல்மிக்கு, பின்னிசு.

[தொடரும்]

குட்டிக்கதை

இவ்வளவா சேர்த்து விட்டேன்?

—த. அன்பழகன்

தையல் ஆசிரியை என்னை மட்டும் வகுப்புக்கு வெளியே நிறுத்தி விட்டார்கள். என் நெஞ்சு விம்மியது. கண்கள் பொலபொல வென்று நீரைச் சிந்தி விட்டன. 'வெளியே போ' என்று கடுகடுப்புடன் சொல்லியிருந்தால் கூட என் மனம் அவ்வளவு வெதும்பியிருக்காது. "ஏண்டி பொய் சொல்லுகிறவள் எல்லாம் பள்ளிக்கூடத்திற்கு வருகிறீங்க?" (நானா பொய் சொல்லுகிறேன்?) பெற்றோரிடம் தையல் வகுப்புக்குத் துணி வாங்க வேண்டும் என்பதைச் சொன்னால் தானே பணம் தருவார்கள்? (நான் சொல்லாமலா இருந்தேன்?) புதுப்படம் வந்திருக்கிறது என்பதை உடனே மறக்காமல் நன்றாகத் திறந்து சொல்லும் வாய் தையல் வகுப்புக்குத் துணி வாங்கவேண்டும் என்பதைச் சொல்ல மட்டும் கொழுக்கட்டை போட்டு மூடிக் கொள்ளுமோ? "ஏனடி, சொல்லச் சொல்ல நின்றுகொண்டிருக்கிறாய்? வெளியே போடி கழுதை" என்று என்னை ஒரு பொருட்டாக மதிக்காமல் இகழ்ச்சியுடன் சொன்னார்கள் தையல் ஆசிரியை. வெளியே வந்து மானக்கேடு பொறுக்க முடியாமல் அழுதே விட்டேன்.

"இங்கு நின்று கொண்டு ஏன் அழ வேண்டும்? வீட்டுக்குப் போய் அழுது பணத்துடன் வகுப்புக்குள் நுழைவது தானே?"— ஆசிரியையின் குரல் என் கால்களை வீட்டை நோக்கி இயக்கியது. தெருவில் வரும்போது அடங்கியிருந்த என் கண்ணீர் வீட்டு வாயிற்படியை மிதிக்கும்போது மீண்டும் பொங்கிவரத் தொடங்கியது. அப்பா மீது எனக்கு எரிச்சல் எரிச்சலாய் வந்தது. எத்தனை தடவை (அம்மா வழியாகச்) சொல்லியிருக்கிறேன், தையல் வகுப்புக்குத் துணி வாங்கப் பணம் வேண்டுமென்று? "கொடுப்போம் கொடுப்

போம்'' என்றால் எப்போது கொடுப்பது? தையல் ஆசிரியை சூடு கொடுத்த பிறகா?

''ஏன குழலி இப்போதே வந்து விட்டாய்? இப்போதுதான் அம்மாவும் அப்பாவும் புதுவைக்குப் போனார்கள்...'' என்று தொடங்கிய அக்காள் முல்லை, என் முகத்தைப் பார்த்ததும் படபடப்புடன் என் அழுகைக்குக் காரணம் கேட்டாள். அம்மாவும் அப்பாவும் இல்லை என்றதுமே எனக்கு மேலும் வருத்தமாக இருந்தது. (தையல் வகுப்புக்கு யாரிடம் பணம் வாங்கிக் கொண்டு போவேன்?) அழுகையை அடக்கிக் கொண்டு அக்காளிடம் நடந்ததைச் சொன்னேன்.

சற்றுநேரம் எண்ணிப்பார்த்த அக்காள் முல்லை, உள் அறைக்குச் சென்று வந்து என் முன் உண்டியலை நீட்டினாள். கூர்ந்து பார்த்தேன். என்னுடைய உண்டியல் தான் அது! அவள் செய்கை சற்று எரிச்சலைத் தந்தது. ''இரண்டு மூன்று காசாகப் போட்டுவந்த இந்த உண்டியலில் எவ்வளவு காசு இருக்கப் போகிறது என்று எனக்குத் தெரியாதா? இதைப் போய் நீட்டுகிறாளே'' என்றுதான் நினைத்தேன். ஆனால் உண்டியலை உடைத்தபின் தான் எனக்கு வியப்பாக இருந்தது. சுளையாக ஐந்து உருபா அறுபத்தேழு காசு இருக்கிறதென்றால் யாருக்குத்தான் வியப்பாக இராது. தையல் வகுப்புக்கு ஐந்து உருபா போதுமே! என்னால் நம்ப முடியவில்லை. இவ்வளவு பணமா சேர்த்து விட்டேன்! ''ஒரு வேளை அக்காளின் உண்டியலாக இருக்குமோ இது?'' என்று ஐயுற்று மீண்டும் அதை உற்றுப் பார்த்தேன். அதில் பூங்குழலி எனறு என் பெயர் தான் எழுதப்பெற்றிருந்தது.

தமிழ்ச்சிட்டு, கடலூர்-1.

(தனித்தமிழ்ச் சிறுவர் கலையிதழ்)

	உள்நாடு.	வெளிநாடு.	கொழும்பு
ஆண்டுக்கட்டணம் உருபா	3-00	6-00	4-00
தனியிதழ் ,,	0-25	0-50	0-35

(அரையாண்டுக் கட்டணம் இல்லை)

ஓரிதழுக்கு 50 காசு மேனி முன்பணம் கட்டக் கூடிய விற்பனையாளர்கள் எழுதிக் கேட்க !

எழுத்துக் கூட்டல்

—நெடுமிடல்

```
   நால்வர்
   நடந்து
  ———————
  வந்தனர்
```

இதோ பார் தம்பி!
இங்கே ஒரு கூட்டல்.
எண்களே இல்லை
எழுத்தே உண்டு.
ஒவ்வோர் எழுத்தும்
ஓர் எண்ணுகும்:
எந்த எழுத்துக்கு
எந்த எண் யாப்புறும்?

எண்ணும் எழுத்தும்
கற்ற என் தம்பி!
கண்ணைக் கட்டிக
காட்டில் விட்டது
போல் இருக்கிறதா?
உன் கருத்தைக் கட்டி,
பகுத்தறிவை ஒட்டி,
ஓடிப் பிடியடா,தமிழ்மகனே!
ஓடிப்போன எண்களையே !

நன்னர் நன்மொழி
வேண்டுகின்றனையோ?
சற்றே பொறுப்பாய்!
விளக்கம் கீழே பார்ப்பாய்!

இவற்றை ஒத்த வேறு தொகுதிகளும் முயற்சியுடையவர்க-ளால் கண்டு பிடிக்கப் படலாம்.

8216		7618
5730	அல்லது	4920
13946		12538

நால்வர் நடந்து வந்தனர்.

எது பெரியது?

—நெடுமிடல்

கீழே உள்ள இரு கூட்டல்களில் பெரிய கூட்டுப்புள்ளி உடையது எது? ஒரே நிமையத்தில் சொல்லுங்கள் பார்க்கலாம்.

987654321	123456789
87654321	123456780
7654321	123456700
654321	123456000
54321	123450000
4321	123400000
321	123000000
21	120000000
1	100000000
_______	_______
_______	_______

எது பெரியது?

இரண்டும் ஒப்பானவை.

இரண்டின் கூடுதல்களும் 108,36,76,269 தான்.

முட்டாளின் 'அறிவாற்றல்'

இரா. சண்முகம், அறி. இ.

பசியுடன் இருந்த ஒரு மூடமகன் ஓர் இட்டலி வாங்கியுண்டான். ஆனால் பசி அடங்கவில்லை. இன்னொரு இட்டலி வாங்கிச் சாப்பிட்டான். இன்னும் பசி எடுத்தது. மேலும் மேலும் ஓர் இட்டலி வாங்கித் தின்றான். அதிலும் வயிறு நிறையவில்லை. பிறகு ஓர் ஆப்பம் வாங்கி மிசைந்தான். பசி நீங்கி விட்டது.

உடனே அந்தமுட்டாள் ஆற்றாமையோடு தலையில் அடித்துக் கொண்டான். "என்னைப்போல அறிவிழந்தவர் யாரேனும் உண்டோ? மூன்று இட்டலிகளை வீணாக்கி விட்டேனே! முதலிலே ஓர் ஆப்பம் வாங்கி உண்டிருந்தால் பசி ஆறியிருக்குமே!" என்று தன்னை நொந்து கொண்டான்.

(அறிஞர் தால்சுத்தாய் யாத்த ஒரு கதையைப் பின் பற்றியது)

தொடர்: 3

கிறித்துவப் பெயர்களுக் கேற்ற தமிழ்ப் பெயர்கள்.

ஆடவர் பெயர் தொடர்ச்சி:—

கிறித்துவப் பெயர்	அது, எந்த மொழி	அதன் பொருள்	அதற்கேற்ற தமிழ்ப்பெயர்
பால்டுவின் Baldwin	தியுத்தானியம்	துணிவான பெருந்தகை நண்பன்	மறவோன் பெருந்தகை
பர்னபை Barnaby பர்னபசு Barnabas பர்னே Barney	ஈபுரு	ஆறுதல் செய்யும்- துயர் நீக்கும்- மகன்	துயர்நீக்கி மருணீக்கி
பர்ட்டன் Barton	ஆங்கில சாக்சானியம்	உழவன் வேளாளன்	வேளிர்
பர்த்தலோமியு Bartholomew	ஈபுரு	உழுவோன் மகன்	உழுமகன் உழுமான்
பெஞ்சமின் Benjamin பென்னி Benny	ஈபுரு	வலக் கையின் மகன்	வலங்கைமான் வலங்கை
பெனடிக்ட் Benedict	இலத்தீன்	பேறு பெற்ற புனிதமான	பேற்றுநன் புனிதன்
பெர்க்லி Berkely	ஆங்கில சாக்சானியம்	பசும்புல் நிலத்திலிருந்து வந்தவன்	பஞிலன் பழனன்
பெர்ஞர்டு Bernard	தியுத்தானியம்	கொடும் கரடி விடாப்பிடியன்	கடுங்கரி கடும்பிடி
போரிசு Boris	சிலாவிக்	போர் மறவன்	மறவன்
போவன் Bowen	கெல்திக்	ஓவன் என்பானின் வழிமகன்-பிறங்கடை	ஓவன்மகன் ஓவன்கடை
பிராட்லி Bradley	ஆங்கில சாக்சானியம்	அகன்ற புல்வெளியினின்று வந்தவன்	பஞிலன் வயலன் பழனன்
பிராண்ட் Brant	தியுத்தானியம்	நெருப்புப் போன்ற தீப் போன்ற	கனலன் தழலன்
புருஞே Bruno	,,	கருஞ்சிவப்பு	கருஞ்செவல் செங்கார்
பர்கெசு Burgess	,,	நகரத்தான்	நகரியன் நகரன்

—தொடரும்

தமிழ்ச் சொல் வளம்.

உள்ளீட்டு வகை:

சாறு — நீர்போலிருப்பது.
சோறு — கட்டிச் சோறுபோல் இருப்பது. (கத்தரி, முருங்கை, கற்றாழை முதலியவற்றின் உள்ளீடு சோறு எனப் படும்).
சதை — வாழை, மா முதலியவற்றின் உள்ளீடு.
சுளை — சீத்தா, பலா முதலியவற்றின் உள்ளீடு.
அரிசி — நெல், கம்பு முதலியவற்றின் உள்ளீடு.
பருப்பு — அவரை, துவரை முதலியவற்றின் உள்ளீடு.

கழிவு வகை:

சக்கை — முந்திரி, எலாமிச்சை முதலியவற்றின் கழிவு.
கொதக்கு—புளியின் கழிவு.
சூந்தை — பனங்காயின் கழிவு.
கோது — கரும்பின் கழிவு.

விதை வகை:

மணி — விளைந்தது.
பதர் — அல்லது பதடி — விளையாதது.
பொக்கு — உள்ளீடற்றது.

மணி வகை:

கூலம் — நெல், புல் (கம்பு) முதலிய தானியம்;
பயறு — அவரை, உழுந்து முதலியவை.
கடலை — வேர்க்கடலை, கொண்டைக்கடலை முதலியவை. (கடலையும் பருப்பில் ஒரு வகையே; கடையப்படுவது கடலை; வறுத்தலும் கடைதலொக்கும்).
விதை — கத்தரி, மிளகாய் முதலியவற்றின் வித்து.
காழ் — புளி, காஞ்சிரை முதலியவற்றின் வித்து.
முத்து — வேம்பு, ஆமணக்கு முதலியவற்றின் வித்து.
கொட்டை —மா, பனை முதலியவற்றின் வித்து.
தேங்காய் —தென்னையின் வித்து.
அவரை, துவரை முதலிய பயறுகள் முதிரை என்று பெயர் பெறும். வித்து என்பது முளைக்கவைக்கும் எல்லா மணிகட்கும் பொதுப் பெயராகும்.

விதைத் தோல் வகை:

தொலி — மெல்லியது. தோல் — திண்ணமானது.
தோடு — சற்று வன்மையானது. ஓடு — மிக வன்மையானது.
சிரட்டை — அல்லது கொட்டாங்கச்சி — தேங்காயின் ஓடு.

—[தொடரும்]

(பாவாணர் — சொல்லாராய்ச்சிக் கட்டுரைகள்)

தென்மொழி மின் அச்சகம், கடலூர்-1. தமிழகம்.